Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 21, 2025

திங்கட்கிழமை 21, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர்: 287 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## யாழில் சபாநாயகர்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான கண்காட்சியையும், திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள புத்தகங்களின் விற்பனையும் யாழ்ப்பாணம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாசார மண்டபத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றன.

தொடர்ச்சி P2

வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை

# “25-30 ஆக குறைக்கத் திட்டம்”



புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை 25 முதல் 30 வரை குறைப்பதே இதன் நோக்கம் என்றும், எதிர்காலத்தில் ஆசிரியர்களின் தொழில் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தென் மாகாண கல்வி அதிகாரிகளுக்காக காலியில் உள்ள கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (19) அன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்துக்களை குறிப்பிட்டார்.

மேலும் புதிய சீர்திருத்தங்கள் பாடத்திட்ட புதுப்பிப்புகளுக்கு அப்பாற்பட்டவை என்றும், ஆசிரியர் தொழில்முறையை மேம்படுத்துதல், கல்வி நிர்வாகத்தை மறுசீரமைத்தல் மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்காக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துகின்றன என்றும் கலாநிதி அமரசூரிய சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## எம்.பியின் மகன் கைது: எம்.பியின் மகள் மாயம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேவின் மகன் இரசிக விதான, சனிக்கிழமை (19) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



நாரம்மல விபத்தில்

## 2 சிறிய குழந்தைகள் உட்பட மூவர் பலி

கதிர்காமம் சென்று திரும்பிக்கொண்டிருந்த வழியில் இடம்பெற்ற விபத்தில், மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



20 ஆண்டுகள் கோமாவில் இருந்த

## சவூதியின் தூங்கும் இளவரசர் காலமானார்

முழுச் செய்தி P6

சஹ்ரானின் 21 ஏக்கர் நிலம்

## காட்டு யானைகளின் வாழ்விடமாகி விட்டது



ஈஸ்டர் தாக்குதல்களின் மூளையாகச் செயல்பட்ட சஹ்ரானுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் மாத்தளை, மஹாவெல காவல் பிரிவின் கெட்டவல, ஹத்தமுங்கல பகுதியில் அமைந்துள்ள 21 ஏக்கர் நிலம் காட்டு யானைகளின் வாழ்விடமாக மாறியுள்ளது தெரியவந்தது.

தொடர்ச்சி P2



“இடது பக்கம் சிக்னல் போட்டு வலது பக்கமாக பயணிக்கும் அரசாங்கம்

## நாட்டை அழித்து வருகிறது”

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தற்போதைய அரசாங்கம் தேர்தல் மேடையில் இடது பக்கம் சிக்னல் போட்டு, தற்போது வலது பக்கமாக சென்று கொண்டு, எத்தகைய கலந்துரையாடல்களையும் நடத்ததாது பொருளாதார மத்திய நிலையங்களை தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## ‘109’ஐ ஊக்குவிக்கும் ஊர்வலம்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை முறைப்பாடு செய்வதற்கான 109 அவசர அழைப்பை ஊக்குவிப்பதற்காக, பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு மற்றும் புலனாய்வுப் பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொது விழிப்புணர்வு ஊர்வலம் கொழும்பு–14 ஆமர் வீதியிலிருந்து காலி முகத்திடல் வரை சனிக்கிழமை (19) அன்று நடைபெற்றது.

## “நடவடிக்கை எடுக்காவிடின் போராட்டம் வெடிக்கும்”



புதிய கல்வி சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் ஈடுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், எதிர்காலத்தில் அனைவருடனும் சேர்ந்து அதற்கு எதிராக போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கும் என்று இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “குறுகிய பார்வை கொண்ட கல்விச் சீர்திருத்தத்தை நோக்கியே நகர்கிறது”



இலவசக் கல்வியை வலுப்படுத்தி, நாட்டின் மாணவர் தலைமுறைக்கு புதிய கல்வி வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் எனினும், மாணவர் தலைமுறைக்கு பயனளிக்காத குறுகிய பார்வை கொண்ட கல்விச் சீர்திருத்தத்தை நோக்கியே இந்த அரசாங்கம் நகர்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

அனுராதபுரம், ராஜாங்கனை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்ற கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதேச செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘அஸ்வெசும’ கால அவகாசம் இன்றுடன் நிறைவு



‘அஸ்வெசும’ நலன்புரி கொடுப்பனவு திட்டத்திற்காக மேன்முறையீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் இன்று திங்கட்கிழமையுடன்(21) நிறைவடையுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது இரண்டாம் கட்டத்தின் கீழ் அஸ்வெசும பயனாளர்களிடமிருந்து சுமார் 30,000 மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாக சபை கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## நிலந்த ஜயவர்தன சேவையிலிருந்து நீக்கம்



2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடந்த பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக கடமை தவறியதாக குற்றம் சாட்டப்பட்ட அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தன பொலிஸ் சேவையிலிருந்து உடன் அமுலாகும் வகையில் நீக்கப்பட்டுள்ளார்.

நிலந்த ஜயவர்தன மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மீமுரே விபத்தில் நால்வர் பலி

கண்டி - உடதும்பர, மீமுரே, ஹபரகெட்டிய குறுகிய வீதியில் சனிக்கிழமை (19) அன்று இடம்பெற்ற வேன் விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன், ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அவர்கள் தெல்தெனிய அல்லது கண்டி தேசிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

உடதும்பர பொலிஸ் நிலையத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள கடினமான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவர்களில் இரண்டு பெண்கள் அடங்குவதாகவும், அவர்கள் கடவத்தை மற்றும் மீரிகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.



கொழும்பு அரசியலில் அதிரடி

## எதிர்க்கட்சி தலைவரின் ஆசனத்தில் மாற்றம்

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மற்றொரு எதிர்க்கட்சி எம்.பிக்கு வழங்குவது குறித்து ரகசிய பேச்சுவார்த்தைகள் தொடங்கியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சமீப நாட்களில் கொழும்பில் பல இடங்களில் இது குறித்த விவாதங்கள் நடைபெற்றன.

ஐக்கிய மக்கள் சக்தி, இரண்டு ஜனாதிபதித் தேர்தல்கள், மூன்று பொதுத் தேர்தல்கள் மற்றும் ஒரு உள்ளூராட்சித் தேர்தலில் தோல்வியடைந்த சூழலில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவிடமிருந்து நீக்கி, வலுவான எதிர்க்கட்சி எம்.பிக்கு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## எம்.பியின் மகன் கைது: எம்.பியின் மகள் மாயம்

பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் அவர் மத்துகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவர், மத்துகம பிரதான நீதவான் ஏ.ஐ.ஹெட்டிவத்த முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (20) ஆஜர்படுத்தப்பட்டார். அவரை அடுத்த மாதம் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

பாகங்களிலிருந்து இணைக்கப்பட்ட ஜீப் தொடர்பான விசாரணை தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகளைக் கைது செய்ய களுத்துறையில் உள்ள நுககொட வீட்டிற்கு, சனிக்கிழமை (19) சென்ற போதிலும், சந்தேக நபரும் அவரது கணவரும் வீட்டில் இல்லை என்று பாணந்துறை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேயின் மகன் ரசிக விதான, சந்தேகத்திற்கிடமான ஜீப்புடன் மதுகம நகரில் வைத்து பாணந்துறை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர் ரோஹித அபேகுணவர்தனவின் மகளிடமிருந்து அதை வாங்கியதாக தெரியவந்தது.

## 2 சிறிய குழந்தைகள் உட்பட மூவர் பலி

இந்த விபத்து நாரம்மல, கிவுல்கல்ல பகுதியில் சனிக்கிழமை (19) அன்று இடம்பெற்றுள்ளது.

தனியார் பேருந்தில் பயணித்த சாரதி மற்றும் 11 மற்றும் 10 மாதங்களேயான இரண்டு சிறிய குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த மூவரும் குருநாகல் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# “25-30 ஆக குறைக்கத் திட்டம்”

இது நாங்கள் தனிப்பட்ட லாபத்திற்காகச் செய்யும் ஒன்றல்ல; இது ஒரு தேசியப் பொறுப்பு. நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளின் அடிப்படையில் இந்த சீர்திருத்தங்கள் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே திட்டமிடப்பட்டன என்றும் அவர் கூறினார்.

சீர்திருத்த செயல்முறை சவாலானது என்பதை அவர் ஒப்புக்கொண்டார், மேலும் ஆக்கபூர்வமான ஈடுபாடு மற்றும் ஆதாரமற்ற விமர்சனங்களை பிரதமர் ஈர்த்துள்ளார் - அவற்றில் சில அரசியல் ரீதியாக நோக்கம் கொண்டவை என்று அவர் குறிப்பிட்டார். "இருப்பினும், இந்த சவால்களை நாம் புறக்கணிக்க முடியாது. கல்வி முறையில் உள்ள பிரச்சினைகளை சரிசெய்ய மக்கள் எங்களுக்கு ஒரு ஆணையை வழங்கினர்," என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்..

ஆசிரியர் மேம்பாட்டில் உள்ள இடைவெளிகளை எடுத்துரைத்த அமைச்சர், ஆசிரியர் பயிற்சி கல்லூரி பாடத்திட்டங்கள் 16 ஆண்டுகளாக மாறாமல் இருப்பதை சுட்டிக்காட்டினார். இதை நிவர்த்தி செய்ய, நாடு முழுவதும் சிறந்த தரமான ஆசிரியர் கல்வியை உறுதி செய்யும் நோக்கத்துடன், ஓகஸ்ட் மாதம் முதல் ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க அரசாங்கம் ஆரம்பிக்கும்.

தேசிய வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப கல்வித் துறையை மாற்றுவதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சிகளில் இந்தத் திட்டம் மற்றொரு படியைக் குறிக்கிறது.

## நிலந்த ஜயவர்தன சேவையிலிருந்து நீக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நிலந்த ஜயவர்தன அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளராக செயற்பட்டிருந்தார்.

இந்த தாக்குதல் தொடர்பில் புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அவருக்கு எதிரான நடவடிக்கைகளை உள்ளடக்கிய சில பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டமையால் நிலந்த ஜயவர்தன சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

## யாழில் சபாநாயகர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சனிக்கிழமை (19) மாலை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டனர். திணைக்களம் வெளியிட்ட நூல்களையும் வாங்கி பயன் பெற்றனர்.

## “நடவடிக்கை எடுக்காவிடின் போராட்டம் வெடிக்கும்”

ஊடகம் ஒன்றுக்கு சனிக்கிழமை (19) அன்று அளித்துள்ள செவ்வி ஒன்றின்போதே அவர் அதனைத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போதைய அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட உள்ள புதிய கல்வி சீர்திருத்த செயல்முறை பல ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் உபாலி சேதுராவால் பரிந்துரைக்கப்பட்டது என்றும்வேறு எந்த தரப்பினரையும் கலந்தாலோசிக்காமல் அதை செயல்படுத்தும் முடிவு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட புதிய கல்வி சீர்திருத்த செயல்முறை அடுத்த ஆண்டு தரம் ஒன்றிலிருந்து தரம் ஆறாம் வரை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், தேசிய கல்வி நிறுவனத்தால் இது குறித்து ஆசிரியர் பயிற்சித் திட்டமோ அல்லது விழிப்புணர்வு ஏற்படுத்தலோ மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கல்வி தொடர்பான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் ஐந்து முக்கிய பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டும்.

தேர்வுப் பிரச்சினைகள்,குழந்தை சேர்க்கை பிரச்சினைகள்,பல்கலைக்கழக சேர்க்கைக்கான போராட்டம் மற்றும் திறன் மேம்பாடு போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு இதுவரை எந்த அரசாங்கமும் தீர்வுகளை வழங்கவில்லை.

புதிய அரசாங்கம் இப்போது மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் கல்வி சீர்திருத்தங்களில் இந்தப் பிரச்சினைகளுக்கு நிச்சயமாக பதிலளிக்கப்பட வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால்,பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டங்களைத் தொடங்க வேண்டியிருக்கும், ”என்றும் ஜோசப் ஸ்டாலின் மேலும் கூறினார்.

## நாட்டை அழித்து வருகிறது

இதில் கட்டமைப்பு சார் மாற்றமொன்றை மேற்கொள்வதாக இருந்தால், வெளிப்படையாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். என்றாலும், எந்த பேச்சுவார்த்தைகளும் இணக்கப்பாடுகளும் எட்டப்படாமல் இதனை முன்னெடுக்க விளைவதன் காரணமாக இந்த முயற்சி தொடர்பில் பல சந்தேகங்கள் எழுகின்றன என்றார்.

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்க உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுடன் சனிக்கிழமை (19) நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவகாரத்தைப் பாராளுமன்றத்தில் முன்வைத்து, கேள்வி எழுப்புவேன்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தன்னிச்சையாக செயல்பட முடியாது. அரசாங்கம் பாராளுமன்றத்தில் எனது பேச்சுச் சுதந்திரத்தைப் பறித்தாலும், இந்த விடயங்களை முன்வைப்பேன். இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்து நேர்மறையான தீர்வுகளைத் தேடுவதற்கு நாடினாலும், அரசாங்கம் எனது பேச்சுரிமையை அனுமதிக்க மறுப்பது ஜனநாயக விரோத செயல் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான விதைகள், உரங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான இரசாயன பதார்த்தங்கள் போன்ற முக்கிய பொருட்கள், உபகரணங்கள் தொடர்பான விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் முயற்சித்த போதிலும், எமக்கு மக்களின் ஆணை கிடைக்கவில்லை. விவசாயிகளை கோலோச்ச வந்த இந்த அரசாங்கம் விவசாயிகளை அழித்து வருகிறது. குறைந்தபட்சம் அறுவடைகளுக்கான உத்தரவாத விலைகள் கூட விவசாயிகளுக்குக் கிடைத்தபாடில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் முற்றிலுமாக மீறப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## ‘அஸ்வெசும’ கால அவகாசம்...

குறித்த மேன்முறையீடுகள் பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு குழுவினூடாக மீளாய்வு செய்யப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

## “குறுகிய பார்வை கொண்ட கல்விச் சீர்திருத்தத்தை நோக்கியே நகர்கிறது”

சமூகத்தில் வாழும் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் துன்பங்கள் குறித்து, பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எழுப்பக்கூடிய அதிகபட்ச குரலை நாம் எழுப்பி வருகிறோம். மக்களின் பிரச்சினைகளைப் பேசும் அதே வேளையில், அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காமை பொருட்டு அரசாங்கத்தை வலியுறுத்தியும் வருகிறோம் எனினும், அரசாங்கத்திடம் உரிய பதில்கள் இல்லை.

மக்களின் பிரச்சினைகளுக்காக முன் நிற்பதை சிலர் பலவீனமான விடயமாகக் கருதி அதை எதிர்க்கின்றனர். முதியோர்களின் சேமிப்பு கணக்குகளுக்கு அதிக வட்டி வீதத்தை வழங்குமாறு பேசும்போது, ஓய்வு பெற்றவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்குமாறு பேசும்போது, இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பிரச்சினைகள் குறித்து பேசும்போது, அவற்றுக்கான தீர்வுகளை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். எனினும், அரசாங்கம் கணக்கிலெடுக்கவில்லை.

மக்கள் சார்பாகக் குரல் எழுப்பி, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேள்விகளை எழுப்பும்போது, இதனைப் பிடிக்காதவர்கள் எதிர்க்கட்சி தவறான வழியில் செயல்படுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவது மக்கள் பிரதிநிதிகளின் பணியாகும். எதிர்க்கட்சிக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு முன்வைத்துத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது எதிர்க்கட்சியின் வேலையாகும். இந்தப் பணியை ஐக்கிய மக்கள் சக்தி சிறப்பாகவே நிறைவேற்றி வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த சில விடயங்கள் காரணமாக அரசாங்கம் செய்த சில தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், மீளப் பெற வேண்டிய சந்தர்ப்பங்களும் கூட காணப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலவசக் கல்வியை வலுப்படுத்தி, நாட்டின் மாணவர் தலைமுறைக்கு புதிய கல்வி வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பல தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டத்தை அரசாங்கம் இரத்துச் செய்திருந்தாலும், தவறைச் சுட்டிக்காட்டி நாம் எதிர்த்ததன் பிற்பாடு, அரசாங்கம் முடிவை மாற்றியது. இன்று, கல்வித் துறையில் சீர்திருத்தம் என்ற பெயரில் வரலாற்றுப் பாடத்தை முற்றிலுமாக நீக்க முயற்சிக்கின்றனர். இதற்கு எதிராக ஒட்டுமொத்த சமூகமும் கிளர்ந்தெழுந்துள்ளது. தேரர்கள், மதத் தலைவர்கள், மதகுருமார்கள் உள்ளிட்டோர் இதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்த அரசாங்கத்திற்கு இதுபோன்ற செயல்களைச் செய்வதற்கு மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை. மாறாக நாட்டிற்குப் பொருத்தமான கல்வியை உருவாக்குவதற்கே அதிகாரத்தை வழங்கினர் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

தகவல் தொழில்நுட்பம், கணினி தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழிக் கல்வி போன்ற புதிய கல்வி வாய்ப்புகள் தொடர்பிலான விடயங்களை நானும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் முன்வைத்த போது எம்மைப் பார்த்துப் பரிகசித்தவர்கள்,

தற்போதுள்ள கல்வி முறையை நேர்மறையான சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தி, பிள்ளைகளுக்கு நன்மைகளை உருவாக்குவதற்குப் பதிலாக, மாணவர் தலைமுறையை அழிக்கும் குறுகிய பார்வை கொண்ட கல்விச் சீர்திருத்தத்தை நோக்கி நகர்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி இந்த பழமைவாத சீர்திருத்தத்தை எதிர்க்கிறது. என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## காட்டு யானைகளின் வாழ்விடமாகி விட்டது

> **தற்போது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றும் சஹ்ரானுக்குச் சொந்தமான இந்த நிலத்தின் எல்லைகளை வரையறுக்க ஒரு கணக்கெடுப்பை மேற்கொள்ள நில அளவைத் துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்று மாகாண செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்**

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் புத்த சாசன மத மற்றும் கலாச்சார விவகார பிரதி அமைச்சருமான கமகெதர திசாநாயக்க தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே மேற்படி விவகாரம் அம்பலமானது.

இந்தக் குழுக் கூட்டம் மாத்தளை மாகாண செயலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இது தொடர்பாகப் பேசிய மாத்தளை மாகாண செயலாளர் பி.பி.சேனாதிர, மாத்தளை நகரத்திற்கு அருகிலுள்ள கிராமங்களுக்குள் நுழைந்த காட்டு யானைகள் இந்த நிலத்தை தங்கள் வாழ்விடமாக மாற்றுவதாகக் கூறினார்.

தற்போது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றும் சஹ்ரானுக்குச் சொந்தமான இந்த நிலத்தின் எல்லைகளை வரையறுக்க ஒரு கணக்கெடுப்பை மேற்கொள்ள நில அளவைத் துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்று மாகாண செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

இந்த நிலம் குறித்து மகாவெல காவல்துறையின் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி பி.பி. சிறிவர்தனவிடம் கேட்டபோது, ஈஸ்டர் தாக்குதல்களின் போது இந்த நிலம் இராணுவ பயிற்சி மையமாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறினார்.

தரிசு நிலங்களில் சாகுபடி செய்யத் திட்டமிடுவதற்காக அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் கீழ் இந்த நிலத்தைப் பயன்படுத்தக் குழு முடிவு செய்தது.

## எதிர்க்கட்சி தலைவரின் ஆசனத்தில் மாற்றம்

வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பிக்கள், அரசியல் பார்வையாளர்கள், சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் அடங்கிய குழு முன்மொழிகிறது.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரின் கீழ் எதிர்க்கட்சியின் வகிபாகம் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்றும், தற்போதைய எதிர்க்கட்சி பல தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் குழுவாக செயல்படுவதாகவும் இந்தக் குழுக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் நாமல் ராஜபக்ஷ, தயாசிறி ஜெயசேகர மற்றும் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் தங்கள் கடமைகளை சிறப்பாகச் செய்து வருவதால், அவர்களில் ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று பலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

> **எதிர்க்கட்சித் தலைவரின் கீழ் எதிர்க்கட்சியின் வகிபாகம் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்றும், தற்போதைய எதிர்க்கட்சி பல தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் குழுவாக செயல்படுவதாகவும் இந்தக் குழுக்கள் சுட்டிக்காட்டுகின்றன**

இதற்கிடையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வேறு ஒருவர் ஏற்கும் சாத்தியக்கூறு மற்றும் சட்ட பின்னணி குறித்தும் இந்த நாட்களில் ஆராயப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

சமீபத்தில் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி எம்.பி. ஒருவர் கட்சித் தலைவரை கலாசார நிதி தொடர்பாக குற்றம் சாட்டியபோது, எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் தனது வாதத்தை முன்வைக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> **தலைமைத்துவத்திற்கு ஏற்றவர்கள் கட்சியில் கணிசமான எண்ணிக்கையில் இருப்பதாகக் கூறிய முன்னாள் அமைச்சர், தேர்தல் தோல்விக்கு சஜித் பிரேமதாச மற்றும் கட்சியின் பிற உறுப்பினர்கள் பொறுப்பேற்க வேண்டும்**

சமீபத்தில் நடைபெற்ற கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தனது கருத்தைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எம்.பிக்கள் தனது சார்பாக ஆஜராகவில்லை என்றால், தான் தனிப்பட்ட முறையில் தனது சார்பாக ஆஜராவதாகக் கூறியுள்ளார்.

இதற்கிடையில், ஐக்கிய மக்கள் சக்தி, சமீபத்தில் சபையை ஒத்திவைத்தபோது, விவாதத்திற்கான தீர்மானத்தை முன்மொழிந்த எம்.பியின் பெயர் அழைக்கப்பட்டது, ஆனால், எம்.பி. இல்லாததால் விவாதம் தடைப்பட்டது, இது ஒத்திவைக்க வழிவகுத்தது. இது எதிர்க்கட்சியின் திறமையின்மையைக் காட்டுகிறது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க கூறுகிறார்.

தலைமைத்துவத்திற்கு ஏற்றவர்கள் கட்சியில் கணிசமான எண்ணிக்கையில் இருப்பதாகக் கூறிய முன்னாள் அமைச்சர், தேர்தல் தோல்விக்கு சஜித் பிரேமதாச மற்றும் கட்சியின் பிற உறுப்பினர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினார்.

## பிரதமருக்கு அழைப்பு

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி - மாணிக்க விநாயகர் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா, ஆகஸ்ட் 6ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், 07.08.2025 அன்று ரத பவனியில் கலந்து கொள்வதற்கான சிறப்பு அழைப்பிதழை பிரதமரின் செயலகத்தில் வைத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, செயலாளர் ஜி.பி.சபுதந்திரி ஆகியோருக்கு ஆலய அறங்காவலர் சபை தலைவர் அ. மாணிக்கவாசகர், செயலாளர் எஸ். சுந்தரலிங்கம், நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ் மற்றும் எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோர் வழங்கினர்.







## நல்லூர் ஆலயத்தில் சபாநாயகர்

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு வெள்ளிக்கிழமை (18) அன்று வருகை தந்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ள சபாநாயகர் பல்வேறு இடங்களிற்கும் செல்லவுள்ளார்.







# கரையோர கடைகளை அகற்றுமாறு அறிவிப்பு

ஏ.எச்.ஹஸ்பர்

கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தால் கிண்ணியா தோணா கரையோரத்தில் உள்ள வியாபார நிலையங்கள் உள்ளிட்ட கட்டிடங்களை அகற்ற கோரி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் உறுதி காணி உள்ளவர்கள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் தமது வாழ்வாதாரங்களை இழப்பதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபிடம் முறையிட்டனர்.

எனவே, இது தொடர்பாக கிண்ணியா அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கொண்டு வந்த பிரேரணையின் பிறகு சனிக்கிழமை (19) கரையோர பகுதிக்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய தரப்புடன் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடினார்.



இதன்போது, கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம்.மஹ்தி, கிண்ணியா நகர சபை செயலாளர் அனீஸ், நகர சபை உறுப்பினர் ரசாத், முன்னாள் நகர சபை உறுப்பினர் கலிபதுல்லாஹ், கிண்ணியா மீனவ சங்கத் தலைவர் பாயிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## முப்பெரும் விழா



எம்.எஸ்.எம்.நூர்தீன்

புனித காத்தான்குடி பெரிய ஜும்ஆ பள்ளிவாயலில் (அல் அக்ஸா) முப்பெரும் விழா பள்ளிவாயலின் தலைவர் எம்.ஐ.எம். ஜவாஹிர் தலைமையில் புனித காத்தான்குடி பெரிய ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை(18) இடம்பெற்றது.

புதிய காத்தான்குடி பெரிய பள்ளிவாயலின் கீழ் இயங்குகின்ற ஹிக்மா பகுதி நேர அல்குர்ஆன் மனன பீடத்தில் அல் குர்ஆனை முழுமையாக மனனம் செய்து முடித்த மூன்று மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், 2024 காத்தான்குடி குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்தி சங்கத்தினால் நடாத்தப்பட்ட அல் குர்ஆன் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த பிர்தௌஸ் மத்ரஸா மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கும் மற்றும் 2024 ரமழான் மாதம் நடைபெற்ற பெண்களுக்கான விசேட மார்க்க விளக்க வகுப்பில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ்களும் பரிசில்களும் நிகழ்வும் முப்பெரும் விழாவாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், சிறப்பு அதிதியாக காத்தான்குடி நகர சபை தலைவர் எஸ்.எச்.எம். அஸ்பர், நகர சபை உறுப்பினர்கள், உலமாக்கள், பள்ளிவாயல் நிருவாகிகள், புத்திஜீவிகள், முக்கியஸ்தர்கள், சமூக அமைப்புக்களின் தலைவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, விசேட சொற்பொழிவை ஜாமிஆ ஹமீதிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் அஷ்ஷேய்க், அல் ஹாபிழ் எஸ்.எச்.எம். றமீஸ் ஜமாலி நடாத்தினார்.



## ஆடிப்பூர மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

திருகோணமலை , திருக்கோணேஸ்வரம் மாதுமை அம்பாள் ஆடிப்பூர மஹோற்சவம் சனிக்கிழமை (19) அன்று திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

– அ.அச்சுதன்

## அடர்ந்த பனிமூட்டம்

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் கடுமையான வானிலை காரணமாக, ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை முதல் அடர்ந்த மூடுபனி பொதுமக்களின் வாழ்க்கையையும் போக்குவரத்தையும் பாதித்து வருகிறது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயாவில் இருந்து நுவரெலியா வரையில் உள்ள குறுக்கு வீதிகளிலும் இந்த அடர்ந்த மூடுபனி நிலை நிலவுவதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதிகளில் வாகனங்கள் செலுத்தும் போது, வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிர விட்டு கவனமாகச் செலுத்துமாறு நானுஓயா பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் கேட்டுக் கொள்கிறார்கள்.

## நலிந்த மட்டக்களப்பிற்கு விஜயம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆகியோர் வெள்ளிக்கிழமை (18) அன்று விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் வைத்திய உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

இதன்போது வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகள் மற்றும் மாவட்டத்தில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையினால் நோயாளர்கள் தமது சிகிச்சையினை பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான தெளிவூட்டல்களை பிராந்திய சேவைகள் பணிப்பாளர் ஆர்.முரளிஸ்வரன் அறிக்கையின் மூலம் விளக்கங்கள் வழங்கியதுடன், மாவட்டத்தில் காணப்படும் சுகாதார சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தை அமைத்தல், வைத்தியசாலைகளைத் தரம் உயர்த்துதல் மற்றும் வாகனங்கள், போக்குவரத்து பிரச்சினை போன்ற பல விடயங்களையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

எதிர்வரும் பாதிட்டில் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அர்பணிப்புடன் செயற்படுவதுடன், மாவட்டத்தி லிருந்து முன்வைக்கப்படும் கோரிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி பற்றாக்குறை காணப்படுவதை சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வைத்திய சேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன் எடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

மேலும், எதிர்வரும் பாதிட்டில் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அர்பணிப்புடன் செயற்படுவதுடன், மாவட்டத்தி லிருந்து முன்வைக்கப்படும் கோரிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி பற்றாக்குறை காணப்படுவதை சுட்டிக்காட்டினார்.

வைத்திய சேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன் எடுப்பதாகவும் கூறினார்.இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சேவை அமைச்சின் செயலாளர் திசாநாயக்க கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் என பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, அமைச்சருக்குப் பிராந்திய சுகாதார பணிப்பாளரினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கல்முனையில் கையெழுத்து வேட்டை

வி.ரி.சகாதேவராஜா

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு என்ற கோரிக்கை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சம உரிமை இயக்கம்

கல்முனை மாநகரில் ஞாயிற்றுக்கிழமை (20) பகல் கையெழுத்து வேட்டை ஒன்றை நடத்தியது.

அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை நீதி வேண்டும் மற்றும் அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை தொங்கவிடப்பட்டிருந்தன.

இதன்போது பலரும் தாமாகவே முன்வந்து கையொப்பமிட்டதுடன், கருத்துக்களையும் தெரிவித்தனர்.

## கம்பஹா மாநகர சபை பொதுமக்களுக்கு அறிவித்தல்

கம்பஹா மாநகரசபைக்கு மன்றத்திற்குச் சொந்தமான கரணயகமுல்ல பொது மயானத்தில் புதிய தகனக்கூடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், கல்லறை கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கால்வாய்க்கு எதிரே உள்ள கல்லறையின் மேல் பகுதியில் புதைக்கப்பட்ட சாம்பலையோ அல்லது உடல்களின் பகுதிகளையோ அந்த இடத்திலிருந்து அகற்றி, இந்த கல்லறையில் வேறு இடத்தில் புதைக்க நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கு முன், இந்த உடல்கள் அல்லது சாம்பலுடன் தொடர்புடைய உறவினர்கள் அல்லது இது தொடர்பாக யாருக்காவது ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால்,2025.07.21 முதல் 14 நாட்களுக்குள் நகராட்சி ஆணையரிடம் ஒரு பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 2025.08.03 க்கு முன்னர் இது தொடர்பாக எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாவிட்டால், அது ஆட்சேபனை இல்லை எனக் கருதப்பட்டு, அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**லோசனா பாலசூரியா**
**மாநகர சபை ஆணையர்,**
**கம்பஹா மாநகர சபை**
**2025.07.21**

# அழகியல் இல்லாது வளர்ந்த மனிதன் ஒரு முட்டாள் நரி

புதிய அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தங்களின் கீழ் வரலாறு மற்றும் அழகியல் ஆகிய இரண்டு பாடங்களும் பாடசாலை பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட உள்ளதாக சமீபத்தில் ஒரு வதந்தி பரவியது. இதற்கு ஆசிரியர் சங்கங்களும் எதிர்க்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தன.

அரசாங்கத்தின் புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்த உண்மைகளை விளக்குவதற்காக நடத்தப்பட்ட ஒரு கருத்தரங்கில், கலந்துகொண்ட பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேற்கண்ட செய்தி ஓர் அப்பட்டமான பொய் என்று கூறினார்.

மூளை உள்ள ஓர் அரசாங்கம் வரலாறு மற்றும் அழகியல் பாடங்களைப் பாடசாலை பாடத்திட்டத்திலிருந்து நீக்காது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஏனெனில், இந்த இரண்டு பாடங்களும் இல்லாமல் சமூகத்திற்கு வரும் ஒரு குழந்தை மனித பிரதி போன்றது.

இந்த இரண்டு பாடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களாக இருக்கக்கூடாது, ஆனால், கட்டாய பாடங்களாக இருக்க வேண்டும். இந்த நாட்டு மக்கள் இன்னும் இலக்கியம், கலை, வரலாறு மற்றும் மதம் ஆகிய பாடங்களில் உணர்திறன் உடையவர்கள்.

வரலாற்றை அறியாமல் சமூக மயமாக்குபவர் சரியான வேர் அமைப்பு இல்லாத வாழை மரத்தைப் போன்றவர். ஒரு வாழை மரம் மிதித்த பிறகு, வாழை மரம் இறந்துவிடுகிறது. ஆனால் வரலாற்றை அறிந்த ஒருவர் தனது நாட்டின் வரலாற்றால் உருவாக்கப்பட்ட கடந்த கால காரணியுடன் வாழ்கிறார் மற்றும் பெருமைமிக்க மனநிலையை வளர்த்துக் கொள்கிறார்.

இந்த நாட்டில் மக்கள் இன்னும் இலக்கியம், கலை, வரலாறு மற்றும் மதம் போன்ற பாடங்களில் உணர்திறன் உடையவர்களாக உள்ளனர்.

ஜே.ஆர்.ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்தபோது இலக்கியத்தை சாப்பிடலாமா என்று கேட்டதாக ஒரு வதந்தி பரவியது. இதன் காரணமாக, ஒரு புதிய குழு ஜே.ஆரை வெறுக்கத் தொடங்கியது. உண்மையில், ஜே.ஆர். அப்படி எதுவும் சொல்லவில்லை.

1970களில், இலக்கிய விழா ஏற்பாடு செய்யப்பட்டபோது ஒரு விவாதம் நடைபெற்றது. ஒரு குழுவில் இருந்த ஒருவர் க "ஓ, ஐயா, நீங்கள் இலக்கியத்தை சாப்பிட முடியுமா?" என்று நகைச்சுவையாகக் கேட்டார். இதுஜே.ஆர்.ஜெயவர்தனவால் கூறப்பட்டதாகக் கூறப்படுகிறது. இறுதியில், இந்த விஷயத்திற்காக ஜே.ஆர். மக்களால் மிகவும் வெறுக்கப்பட்டார்.

அழகியல் இல்லாமல் வளர்க்கப்பட்ட மனிதன் ஒரு முட்டாள் நரி போன்றவன். ஒரு நரிக்கு ஊளையிட மட்டுமே தெரியும். அந்த உதவியற்ற விலங்கிற்கு அதைத் தாண்டி எந்தப் பயனும் இல்லை. கலை மற்றும் அழகியல் பற்றித் தெரியாத மனிதன் வெறும் இயந்திரம். ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்காதவன், ஒரு நல்ல திரைப்படத்தைப் பார்க்காதவன், நல்ல பாடல்களைப் பிடிக்காதவன், ஒரு நல்ல மேடை நாடகத்தைப் பார்க்காதவன் மோசடி போன்ற வேலைக்கு உதவுவதற்கு மட்டுமே பொருத்தமானவன்.

அத்தகையவர்களைக் கொண்டு ஒரு நாட்டையோ அல்லது ஒரு தேசத்தையோ கட்டமைக்க முடியாது.

கலை, இலக்கியம், அழகியல் மற்றும் வரலாறு தெரியாத மக்களால் நிறைந்த ஒரு நாடு வெறும் ஐந்து பரிமாண மக்களின் கூட்டமாகும். எனவே, பாடசாலை பாடத்திட்டத்திலிருந்து இலக்கியத்தையும் அழகியலையும் நீக்க முயற்சித்தால், அதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதே சிறந்தது.

தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

பருத்தியூர் பால.வயிரவநாதன்

# புதிய அரசின் பொறுப்புக்கூறல்?

லக்ஸ்மன்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர் மாத கூட்டத் தொடர் இலங்கை அரசாங்கத்திற்கு மற்றுமொரு அல்லது புதிய நெருக்கடியாக அமைய வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பாகும். அது சாத்தியமாவதும் இல்லாமல் போவதும் கொண்டுவரப்படும் புதிய பிரேரணையிலேயே தங்கியிருக்கிறது. 2022ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட பிரேரணைத் தீர்மானத்தின் காலம் முடிவடைய இருந்த நிலையில் கடந்த வருடத்தில் அத் தீர்மானம் ஒரு வருடகாலத்திற்கு நீடிக்கப்பட்டது. அது வருகிற செப்ரம்பரில் முடிவுக்கு வருகிறது.

இந்த நிலையில், இவ்வருடத்தில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணையொன்றினை பிரிட்டன் முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது பிரிட்டனுடைய உறுதியான நிலைப்பாடாக இருப்பதாகவே இப்போது வரையில் அறியமுடிகிறது. கொண்டுவரப்படவுள்ள இந்தப் பிரேரணை ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் ஏற்கனவே முன்னெடுக்கப்படும் பொறுப்புக் கூறல் செயற்றிட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கான ஏதுக்களைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியமானது.

மனித உரிமைப் பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள், அது தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதிகள், அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுதல் என்பன ஒன்றுக்கொன்று சமாந்தரமோ, பொருத்தப்பாடோ இல்லாமல் நகர்ந்து கொண்டிருப்பதே நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் வருகின்ற செப்டெம்பர் மாதத்தில் ஏற்படுத்தப்படும் பிரேரணைத் தீர்மானமானது இவற்றினை உறுதிப்படுத்தும் வகையிலும் உரிய பிரேரணை தீர்மானங்கள் சிறப்பாக நிறைவேற்றப்படும் வகையிலும் இருப்பது அவசியமாகும்.

2022ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணைத் தீர்மானத்தின்படி ஐ.நா. மனித உரிமைப் பேரவையினால் முன்னெடுக்கப்படும் சாட்சியங்களைத் திரட்டும் பணியும் நீடிக்கப்பட்டிருந்தது. ஆனால், மீண்டும் இதனை நீடிக்க முடியுமா என்பது கேள்விக்குறியானதுதான். அந்த ஒழுங்கில்தான் புதிய தீர்மானத்தின் கட்டாயம் மற்றும் அவசியம் உணரப்பட்டிருக்கிறது. சாட்சியங்களைத் திரட்டும் பணியை நாட்டுக்குள் மேற்கொள்வதற்கு இலங்கையின் கடந்த அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது என்றவகையில் புதிய அரசாங்கத்திடமிருந்து இவ்வருடத்தில் அதற்கான சாத்தியம் இருக்கிறதா என்பது தெரியாமலிருக்கிறது. ஏனெனில் கடந்த வருடத்தின் கால நீடிப்பு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்ப்பினை வெளிக்காட்டியிருந்தது.

அந்த வகையில்தான், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கவேண்டிய அவசியம் காணப்படுகிறது. அத்துடன், மனித உரிமைப் பேரவையின் பிரேரணைத் தீர்மானங்களின் காலத்தை நீடித்தல், புதிய பிரேரணைகளைக் கொண்டுவருதல் மூலம் இலங்கைக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்து தங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளத் தமிழர் தரப்பு முயன்று வருகிறது.

முள்ளிவாய்க்காலில் 2009 மே மாதத்தில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட யுத்தம் ஓய்ந்து 16 வருடங்கள் கடந்த போதிலும் பொறுப்புக்கூறல் விடயத்தில் நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் உரிய அக்கறையினை காண்பித்திருக்கவில்லை. இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டுப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. இதற்கான வலியுறுத்தல்களே இப்போது நடைபெற்று வருகின்றன என்பதுதான் உண்மை.

2012ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது உள்ளக விசாரணைப் பொறிமுறை மூலம் பொறுப்புக்கூறலுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்போதைய அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால், அது நடைபெறவில்லை. 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் செப்டெம்பர் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை அரசாங்கத்தால் இணை அனுசரணை வழங்கப்பட்டது. அப்போது, சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய உள்ளகப் பொறிமுறையின் கீழ் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி ஆசையினால் அது நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டது. அந்தவகையில், நல்லாட்சி அரசாங்க காலத்திலும் பொறுப்புக்கூறல் விடயமானது கைகூடாமல் போனது.

இருந்தாலும், காணாமல் போனோருக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றுக்கான செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டிருந்தன. நம்பிக்கையீனம் காரணமாகத் தமிழ் மக்கள் இவற்றினை ஏற்றுக்கொள்ளவில்லை. அதே நேரத்தில், சர்வதேச விசாரணையையே பாதிக்கப்பட்ட மக்கள் கோரினர். ஆனால், உள்ளக விசாரணைப் பொறிமுறையில் நம்பிக்கை இழந்தமையினாலேயே தமிழ் தரப்பினர் சர்வதேச விசாரணையினை வலியுறுத்திவருகின்றனர் என்பதனை அரசாங்கம் உணர மறுப்பதே இந்த இடத்தில் சிக்கலாகும். இவ்வாறான சிக்கல்களுக்குள்தான் நல்லாட்சி அரசாங்கம் முடிவுக்கு வந்து புதிய அரசாங்கம் உருவானது.

ஆனால், 2022ஆம் ஆண்டு ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதையடுத்து நல்லாட்சி காலத்தில் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களில் முக்கியமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை அமைத்து அதன் மூலம் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் அதுவும் நின்று போனது. இருந்த போதிலும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கடந்த செப்டெம்பர் மாதம் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி வழங்கியிருந்தார். என்பதும், அதற்கான நடவடிக்கைகள் எதுவும் புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கான தீர்வினை கடந்த அரசாங்கங்கள் கால இழுத்தடிப்புடனேயே நகர்த்தின, கடந்து போயிருக்கின்றன. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது வெறுமனே பொறுப்புக்கூறலுடன் முடிந்து போகின்ற விடயமல்ல என்பதும் வெறுமனே வாக்குறுதிகளால் இதனைச் சரி செய்துவிடலாம் என்று எண்ணுவதும் புத்திசாலித்தனமானதல்ல. சீரான முன்னேற்றத்துடன் அது முன்னெடுக்கப்படவேண்டும்.

அந்த வகையில்தான் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் செப்டெம்பர் மாத அமர்வில், இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை கொண்டுவரப்படவேண்டும். அதன் மூலம், இலங்கை அரசாங்கத்துக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் உருவாகி வருகின்றன. பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் வரை அழுத்தங்கள் இருந்து கொண்டே இருக்கும்.

பிரிட்டன் கொண்டுவரவுள்ள புதிய பிரேரணையானது பிரித்தானியாவை தலைமையாகக் கொண்ட இணை அனுசரணை நாடுகளினால் கொண்டுவரப்படவுள்ளதாகவே இருக்கும் என்றவகையில், பலமானதொரு தீர்மானமாக நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை தமிழர் தரப்பிடம் இருக்கிறது.

அந்த ஒழுங்கில்தான், இப்போது ஆட்சியிலுள்ள மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னைய அரசாங்கங்களின் கொள்கைகளையே கடைப்பிடிக்கின்றது என்ற குற்றச்சாட்டு வெளிவர ஆரம்பித்திருக்கிறது. அது தவிர்க்கப்படவேண்டுமாக இருந்தால், புதிய அரசாங்கம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இல்லாது போனால், நாட்டுக்குள்ளும் சர்வதேசத்திலும் புதிய அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கை இழப்புக்கு அவர்களே காரணமாவார்கள். அத்துடன், அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் ஏற்றுக் கொண்டமைக்கு அது சமமானதாகும். அதே நேரத்தில், இலங்கையின் அரசாங்கங்கள் பொறுப்புக் கூறல் விடயத்தில் உரிய அக்கறை காண்பிக்காமையினாலேயே தமிழ் தரப்பு இப்போதும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்பாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றமையை மீண்டுமொருமுறை நிரூபிப்பதாகவும் இருக்கும்.

எது எவ்வாறானாலும், மனித உரிமைப் பேரவையின் செப்டெம்பர் அமர்வில் கொண்டுவரப்படும் பிரேரணையும், அதன் நிறைவேற்றமும் அதற்கு இலங்கை அரசாங்கம் காண்பிக்கும் பிரதிபலிப்பும்தான் இவற்றினைத் தீர்மானிக்கும்.

## கடிதங்கள்

### தடுப்பூசிக்கு தட்டுப்பாடு

திருகோணமலை மாவட்டத்தில் விசர் நாய்க்கடி தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் ஏ.ஆர்.வி. என்று அழைக்கப்படும் விசர் நாய் கடிக்கான தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலை, கிண்ணியா தள வைத்தியசாலை, மூதூர் தள வைத்தியசாலை மற்றும் கந்தளாய் தள வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் தடுப்பூசி இல்லையெனவும் வைத்தியசாலையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் நாய் கடிக்கு இலக்கான நிலையில் வருகை தருவதாகவும் இந்நிலையில் குச்சவெளி, ரொட்டவெவ,புல்மோட்டை. சம்பூர், வெருகல், சேருவில போன்ற தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையை நம்பி வருகை தந்து மீண்டும் தடுப்பூசி ஏற்ற முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

- எஸ்.கீதபொன்கலன்



தமிழர்களின் இருண்ட வரலாற்றில்

# மரணத்தின் மௌன சாட்சி




என்.நிசன்குமார் கோபிநாத்,
முதலாம் வருடம்,
கலைப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.


இன்று சர்வதேச ரீதியில் அனைவரினதும் கவனத்தையும் திசை திருப்பியுள்ள செம்மணி மனிதப் புதைக்குழி மனவேதனையை தரும், இருண்ட வரலாறாகும். இந்த மனித புதை குழிக்குப் பின்னால் உள்ள அரசியல் சூழ்ச்சிகள் என்ன? இதில் மறக்கப்படும் உண்மையும் மறுக்கப்பட்ட உரிமைகளும் எங்கே? இன்று பல கேள்விகளுக்குக் காரண கருத்தாவாக செம்மணி விவகாரம் அடையாளப்படுத்தப்படுகிறது. இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள செம்மணி கிராமம் ஒரு காலத்தில் அமைதியான விவசாயப் பகுதியாக, இருந்தது.

ஆனால், 1990களில் இடம்பெற்ற கொடூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் இனவெறி தாக்குதல்களின் பின்னணியில், செம்மணி இன்று தமிழர்களின் வரலாற்று சோகத்தின் சின்னமாக மாறியுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகள் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு நீதி மறுக்கப்பட்டதையும் இலங்கை அரசின் நடவடிக்கையின்மையையும் வெளிக்கொணருகின்றன. 1996ஆம் ஆண்டு, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தினர் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்ட சம்பவம்செம்மணி விவகாரத்தின் தொடக்கமாகும்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ஷ 400க்கும் மேற்பட்ட தமிழர்கள் செம்மணியில் புதைக்கப்பட்டதாக அதிர்ச்சி வாக்குமூலம் அளித்தார். இதனடிப்படையில், 1999 பன்னாட்டு கண்காணிப்புடன் அகழ்வுகள் தொடங்கப்பட்டன. அகழ்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் 1999 முதல் 2025 வரை பல கட்டங்களில் அகழ்வுகள் நடைபெற்றன. இதுவரை 65 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் சிறு குழந்தைகளின் எச்சங்கள் அடங்கும். பரிசோதனைகள் சட்ட மருத்துவ ஆய்வுகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையில் அகழ்வுகள் நடைபெற்றன. 2025 மீண்டும் அகழ்வுகள் தொடங்கப்பட்டு 33 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதில் பச்சிளம் குழந்தைகள் உட்பட பலர் அடங்கியிருந்தனர் கனவுகளோடு பாடசாலை சென்று வந்து கிருசாந்தி மற்றும் கனவுகளோடு இருந்த பல சிறுவர்கள் செம்மணி புதைக்குப் பலியாகி உள்ளார்கள். எவ்வளவு மன வேதனையான உடையும் பல சித்திரவதைகளை அனுபவித்த எம் உறவுகள் இன்று மண்ணோடு மண்ணில் கலந்து, இருக்க அவர்களை வேட்டையாடிய மனித மிருகங்கள் இன்னும் இந்த நாட்டிலே உயிருடன் தானே இருக்கின்றன. இதுதானா நீதியா? பாதிக்கப்பட்டவருக்கு நீதி அதன் தன்மையை உறுதி செய்கின்றதா? அல்லது பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கு நீதியின் தன்மை உறுதி செய்கின்றதா? என்பது செம்மணி விவகாரத்தை பார்க்கும் பொழுது இந்த கேள்வி நம் மனதில் ஆழமாக எழுகின்றது.

ஒவ்வொருவருக்கும் வெகுமதியான உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. செம்மணியில் சித்திரவதை செய்யப்பட்ட உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது எமது கடமையாகும். நீதிக்கான போராட்டம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 16 வருடங்களாக நீதி தேடிப் போராடி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணிக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். இது சர்வதேச கவனத்தை ஈர்த்தது. பல தமிழ் அமைப்புகள் சர்வதேச விசாரணை மட்டுமே தீர்வாக இருக்க முடியும் என வலியுறுத்துகின்றன. இலங்கை நீதிமன்றங்கள் மற்றும் அரசாங்கம் விசாரணைகளைத் தாமதப்படுத்தி குற்றவாளிகளைப் பிணையில் விடுவித்ததாலும், நீதி மறுக்கப்பட்டதாகப் பல தரப்புகள் குற்றம் சாட்டுகின்றன. எத்தனை உண்மைகள் மறைக்கப்பட்டன ஆரம்பத்தில் மாடுகளின் எலும்புக்கூடுகள் என்றார்கள் மிருகங்களை விட மோசமான மனித உயிர்கள் தான் உலகில் காணப்படுகின்றது.

என்பதற்கு செம்மறி ஒரு எடுத்துக்காட்டு அந்த மிருகங்களுக்கு வழங்கப்போகும் தண்டனை என்ன 1996ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட கிருசாந்தி மற்றும் அப் பெண்ணுடன் தொடர்புபட்ட அவளது அயலவர்கள் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி எங்கே? அது எப்பொழுது சாத்தியமாகும்? குடும்பம் இன்று செம்மணி மனித புதைகுழியை அகழ்வதற்கு வரவு-செலவுத் திட்டத்தின் பணமில்லை என்று சொல்கின்றார்கள் இது மனித உரிமை மீறல் வெறுமனே பணத்தால் மனித உரிமை பங்கத்திற்கு உள்ளாகின்றது ஏன்? செம்மணிக்கான நீதி எப்பொழுது கிடைக்கும் இன்னும் எத்தனை வருடம் எமது போராட்டம் தொடரும் கொல்லப்பட்டவர்களது எலும்புகள் சிதைவடைகின்றதே தவிர, அவர்களுக்கான நீதி இன்னும் நிலைநாட்டப்படவில்லை இதற்கு பின்னால் உள்ள சூழ்ச்சிகள் என்ன? எம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நீதி உடனடியாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.சமூக மற்றும் அரசியல் தாக்கங்கள் தமிழர் சமூகத்தில் ஆழ்ந்த மன உளைச்சல் அரசின் மீது நம்பிக்கையிழப்பு ஏற்பட்டுள்ளது.

இது இனப்படுகொலை என்ற வார்த்தையை அரசியல் உரையாடல்களில் பரவலாக்கியது. அரசின் நடவடிக்கையின்மை இதனை மூடி மறைக்க முயற்சிக்கின்றது என பல அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. காணாமல் போனவர்களின் உறவினர்கள் “எங்களுக்கான நீதியைச் சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும் ” என வலியுறுத்துகின்றனர். செம்மணி விவகாரத்தில் நீதிக்கான தேடலும், நிரந்தர தீர்வும் செம்மணி மனித புதைகுழி விவகாரம் யாழ்ப்பாணத்தின் மனசாட்சியில் ஆறாத வடுவாகப் பதிந்திருக்கிறது. வெறுமனே ஒரு புதைகுழி அல்ல காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரின் குரலற்ற அழுகுரல் நீதி மறுக்கப்பட்ட குடும்பங்களின் வலியின் வெளிப்பாடு பெரும் துயரம் மூடிமறைக்கப்படவோ மறக்கப்படவோ முடியாத ஒன்றாகும்.

செம்மணி விவகாரத்திற்கு ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம் இது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதோடு மட்டுமல்லாமல் ஒரு சமூகமாக நாம் முன்னோக்கி நகர்வதற்கும் அவசியமானதாகும் ஏன் செம்மணி விவகாரம் ஒரு தீர்வு காணப்பட வேண்டும் நீதிக்கான உரிமை காணாமல் ஆக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை உண்டு. செம்மணிப் புதைகுழி மறைக்கப்பட்ட உண்மைகளின் ஒரு துண்டு. இந்த உண்மைகள் வெளிக்கொணரப்பட்டு குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் இது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருவித ஆறுதலை அளிக்கும். மீண்டும் நிகழாமல் தடுக்க இதுபோன்ற கொடூர சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குக் கடந்தகால தவறுகளை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்வது அவசியம். செம்மணி போன்ற சம்பவங்களுக்கு நீதி கிடைக்காவிட்டால், அது எதிர்காலத்தில் மனித உரிமை ம மீறல்கள் தொடர்வதற்கு ஒரு சமிக்கையாக அமையலாம் நல்லிணக்கத்திற்கு அடித்தளம்.உண்மையை வெளிக்கொண்டு வந்து, பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதன் மூலம் தான் நல்லிணக்கத்திறகான உறுதியான அடித்தளத்தை இட முடியும் நீதியின்றி நல்லிணக்கம் ஒருபோதும் முழுமையடையாது.

செம்மணி விவகாரத்திற்கு தீர்வு காண்பது

சமூகங்களுக்குக்கிடையே நம்பிக்கையை வளர்க்கும். பிளவுகளைக் குறைக்கும் செம்மணி மனித புதைகுழி என்பது ஒரு வரலாற்றுச் சிந்தனை அல்ல. இது மனித உரிமை, சமூக நீதி மற்றும் இன ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு விழிப்புணர்வு. இது மறக்க முடியாதது மட்டுமல்ல, மீண்டும் நிகழக்கூடியதைத் தடுக்கும் சமூகப் பாதுகாப்பு அடித்தளமாக அமைக்கப்பட வேண்டும். தமிழர் சமூகத்தின் நீதி தேடல், உலகம் கேட்க வேண்டிய ஒரு குரலாக இருக்க வேண்டும் மனித உரிமைகளின் பாதுகாப்பு செம்மணி விவகாரம் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டதற்கான சான்று. இந்த விவகாரத்திற்குத் தீர்வு காண்பது, மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும்.

ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கான நமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும்.செம்மணி விவகாரம் வெறும் ஒரு உள்ளூர் பிரச்சினையல்ல, அது சர்வதேச அளவில் மனித உரிமைகளுக்கும், பொறுப்புக்கூறலுக்கும் ஒரு முக்கியமான முன்னுதாரணமாகும் இந்த விவகாரத்திற்கு ஒரு தெளிவான, வெளிப்படையான மற்றும் நீதியான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று இலங்கை அரசையும் சர்வதேச சமூகத்தையும் மனித உரிமை அமைப்புகளையும் நாம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் பாதிக்கப்பட்டவர்களின் வலியை உணர்ந்து, அவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வது நமது அனைவரினதும் தார்மீகப் பொறுப்பாகும்.

# SLT– MOBITEL AI Pazz உடன் கைகோர்ப்பு



இலங்கையில் சட்டபூர்வ ஆய்வுகளை மாற்றியமைக்கும் முக்கியத்துவம் வாய்ந்தநகர்வாக, SLT-MOBITEL மொபைல், Redblocks AI (Pvt) Ltd உடன் கைகோர்த்து AI Pazz எனும் இலங்கையின் முதலாவது AI வலுவூட்டப்பட்ட சட்டபூர்வ ஆய்வுகட்டமைப்பை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக இலங்கையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் புதுப்பித்த டிஜிட்டல் சட்ட நூலகத்தைக் கொண்டுள்ளது, மேம்பட்ட சட்ட ஆய்வு சாதனங்களுக்கு ஒப்பற்ற அணுகலை வழங்குகிறது. இந்தப் புரட்சிகரமான கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவை விரிவான சட்ட உள்ளடக்கத்துடன், ஒருங்கிணைத்து, சட்ட மாணவர்கள், பயிற்சி பெறும் வழக்கறிஞர்கள், சட்டக் கல்வியாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு புத்திசாலித்தனமான, வேகமான மற்றும் நம்பகமான சட்ட ஆய்வு திறன்களை வழங்குகிறது.

பாரம்பரிய சட்ட ஆய்வுமுறைகளில் நீண்ட காலமாக காணப்படும் சவால்களை எதிர்கொள்ள வடிவமைக்கப்பட்ட AI Pazz, வழக்குச் சட்டம், சட்டம் மற்றும் நீதித்துறை தீர்ப்புகள் உட்பட ஆயிரக்கணக்கான சட்ட ஆவணங்களை உடனடி அணுகலை பயனர்களுக்கு வழங்குகிறது.

இந்ததளம் அனைத்து NLR மற்றும் SLR தொகுதிகள், உச்ச நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. மேலும், 48 மணிநேரத்திற்குள் overrule கண்டறிதல், AI- உதவியுடன் சட்டவரைவு மற்றும் நிகழ் நேர புதுப்பிப்புகள் போன்ற மேம்பட்ட கருவிகளைக் கொண்டுள்ளது.

முக்கியதுறைகளில் டிஜிட்டல் மாற்றத்தை முன்னெடுப்பதற்கான அதன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, SLT-MOBITEL மற்றும் AI Pazzஇன் கூட்டாண்மை, அதி நவீன சட்ட ஆய்வு சாதனங்களுடன் நிபுணர்களுக்கு அதிகாரத்தை வழங்குகிறது. AI Pazzஇன் இணையதளத்தை பார்வையிட்டு வாடிக்கையாளர்கள் சகல AI Pazz பதிவுகளிலும் 20% விலைக்கழிவைப் பெறலாம். இந்த விசேட சலுகை SLT-MOBITEL மொபைல் வாடிக்கையாளர்கள் AI Pazz-ஐ தடையின்றி பதிவு செய்து, அதி நவீன, AI-இயக்கப்படும் சட்ட ஆய்வு திறன்களைப் பெற உதவுகிறது. இந்த முயற்சி உயர்தர, AI-இயக்கப்படும் சட்ட ஆய்வு சாதனங்களை பரந்த அளவிலான பார்வையாளர்களுக்கு, குறிப்பாக சட்ட மாணவர்கள், சட்ட பயிற்சியாளர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட வளர்ந்து வரும் சட்ட சமூகத்திற்கு மிகவும் அணுகக்கூடியதாகவும் மலிவுவிலையிலும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

SLT-MOBITEL மொபைல் பயனர்கள் AI Pazz சேவையின் அடிப்படை நிலையில் 14 நாள் இலவச சோதனையையும் அனுபவிக்கமுடியும்.

AI Pazz-ஐ வழங்க Redblocks AI உடன் கைகோர்த்து, SLT-MOBITEL பல்வேறு முக்கிய துறைகளில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. AI Pazzஇன் அறிமுகம், இலங்கையின் சட்ட சமூகத்திற்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் தருணத்தைக்குறிப்பதுடன், இது மிகவும் திறமையான, புத்திசாலித்தனமான மற்றும் அணுகக் கூடிய சட்ட ஆய்வு சூழலுக்கான அடித்தளத்தை வழங்குகிறது. AI Pazz உடன், இலங்கையின் சட்ட வல்லுநர்களும் மாணவர்களும் இப்போது அறிவு, செயல் திறன் மற்றும் நீதியைப் பின் தொடர்வதற்கான சக்திவாய்ந்த பங்காளரைக் கொண்டுள்ளனர். சட்டத் தொழில் எதிர்காலத்தைத் தழுவி வரும் வேளையில், SLT-MOBITEL முன்னணியில் திகழ்ந்து, தொழில்நுட்பத்தின் மூலம் முன்னேற்றத்தை சாத்தியமாக்குகிறது.




# கொமர்ஷல் வங்கி டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவிப்பு

கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கிப் பிரிவானது அண்மையில் இலங்கை மத்திய வங்கி, வங்கியின் கிழக்கு பிராந்திய அலுவலகம் மற்றும் கல்முனை கிளை ஆகியவற்றின் அழைப்பின் பேரில், கல்முனையில் உள்ள கார்மல் பாத்திமா கல்லூரியின் 125வது ஆண்டு விழா கல்வி கண்காட்சியில் பங்கேற்றது. பிராந்தியத்தில் டிஜிட்டல் விழிப்புணர்வு மற்றும் நிதியியல் கல்வியறிவை மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை நிரூபிக்க வங்கி இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது.

80க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இருந்து பதிவுசெய்யப்பட்ட 21,000க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை ஈர்ப்பதாக அமைந்த இந்த நிகழ்வானது, கொமர்ஷல் வங்கியின் அதிநவீன டிஜிட்டல் வங்கி தீர்வுகளை காட்சிப்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாக செயல்பட்டது. இந்த நிகழ்வில் அமைக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி மினி டிஜி வலயத்தை, ‘கொம்பேங்க் டிஜிட்டல்’ மற்றும் வங்கியின் ‘டொட்கொம்’ சேமிப்புக் கணக்கின் செயல்விளக்கங்களை வழங்கியதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளடக்கியதான பரந்த சமூகத்தை டிஜிட்டல் வங்கியின் சக்தி மற்றும் வசதியை எடுத்துக்காட்டும் நடைமுறை அனுபவங்களில் ஈடுபடுத்தியது.

வங்கியின் இந்த முயற்சிக்கிணங்க டிஜிட்டல் கல்வியறிவு, சைபர் பாதுகாப்பு மற்றும் நவீன நிதியியல் நடைமுறைகள் குறித்து வங்கி பிரதிநிதிகள் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தினர், இது டிஜிட்டல் ரீதியாக அதிகாரம் பெற்ற தலைமுறையை வளர்ப்பதற்கான வங்கியின் பரந்த நோக்கத்தை ஆதரிப்பதுடன் டிஜிட்டல் நிதியைப் பற்றிய அறிவூட்டல்களை வழங்கி, பாதுகாப்பான பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம், பாதுகாப்பான, அணுக்கக்கூடிய வங்கி தீர்வுகளில் நீண்டகால வாடிக்கையாளர் நம்பிக்கையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இந்த முயற்சியானது ஸ்மார்ட், பாதுகாப்பான நிதி எதிர்காலத்திற்கான கருவிகள் மற்றும் அறிவுடன் சமூகங்களை சித்தப்படுத்துவதன் மூலம் நாடு முழுவதும் டிஜிட்டல் மாற்றத்தை செயற்படுத்துவதற்கான கொமர்ஷல் வங்கியின் தொடர்ச்சியான நோக்கத்தை பிரதிபலிக்கிறது.

# யூனியன் வங்கி Turbo–Draft–Bigger & Better வாகனத்துக்கான ஸ்மார்ட்டான வழி



யூனியன் வங்கி Turbo-Draft, மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க நிதி வசதியளிப்பாக அமைந்திருப்பதுடன், நெகிழ்ச்சியான கொடுப்பனவு நியதிகள் மற்றும் பெருமளவு குறைவான மாதாந்த தவணைக் கட்டணங்களுடன் வழங்கப்படும் தீர்வாக அமைந்துள்ளது. இதனூடாக, தனி நபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு வாகன மெருகேற்றங்களை மேற்கொள்வது மற்றும் ப்ரீமியம் வாகனங்களை கொள்வனவு செய்வது என்பது தற்போது மேலும் இலகுவாக்கப்பட்டுள்ளது.

யூனியன் வங்கி Turbo-Draft இனால் வாடிக்கையாளர்களுக்கு தமது கொடுப்பனவு திட்டங்களை 30 மாதங்கள்வரை மீளச்செலுத்தக் கூடியவகையில் திட்டமிட்டுக்கொள்ளலாம். மாதாந்தம் சிறிய தொகையை மேற்கொண்டு, இறுதியாக பெருமளவு தொகைகொடுப்பனவை செலுத்திதீர்க்கலாம். அதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு Bigger and Better வாகனத்தை அதே மாதாந்த கட்டணத்துக்கு கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும். யூனியன் வங்கி Turbo-Draft ஊடாக, ஸ்மார்ட்டான பட்ஜெட் நிர்வகிப்பும், புதிய வாகனங்களை துரிதமாக அணுகும் வசதியும் வழங்கப்படுகிறது.

யூனியன் வங்கியின் லீசிங் பிரிவின் தலைமை அதிகாரி கசுன் பாலசூரிய கருத்துத் தெரிவிக்கையில், “யூனியன் வங்கி Turbo-Draft இனால், எமது வாடிக்கையாளர்களுக்கு பெருமளவு மாதாந்த சுமைகளின்றி புதிய வாகனமொன்றின் உரிமையாளராவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. நெகிழ்ச்சியான செலுத்தித் தீர்க்கும் வசதியை கொண்டுள்ளது. துரித அனுமதிகள் மற்றும் மாற்றியமைத்துக் கொள்ளக் கூடிய நிதி வசதியளிப்பு தெரிவுகளுடன், யூனியன் வங்கி Turbo-Draft வாடிக்கையாளர்களுக்கு வாகனமொன்றின் உரிமையாளராவதற்கான ஸ்மார்ட்டான மற்றும் சௌகரியமான வசதியை வழங்குகிறது. ” என்றார்.



அமெரிக்கா

# “தண்ணீர் வெடிகுண்டு போடத் தயாரான சீனா”

சீனா தமது கட்டுப்பாட்டில் உள்ள திபெத் மாகாணத்தில் பிரம்ம புத்திரா நதியின் குறுக்கே, உலகிலேயே மிகப்பெரிய நீர்மின் (Hydropower) அணையைக் கட்டும் பணியை அதிகாரப்பூர்வமாகத் ஆரம்பித்துள்ளது. இந்த அணைக்கான முதலீடு மட்டும் ரூ.14 இலட்சம் கோடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேடோங் மாவட்டத்தில் அமைக்கப்படும் இந்த அணை, இந்திய எல்லையிலிருந்து வெறும் 50 கிலோமீட்டர் தொலைவில் மட்டுமே உள்ளது என்பது முக்கியமான விஷயமாகும். இதற்கான திட்டத்தினை சீன பிரதமர் லி குயாங் உறுதிப்படுத்தினார்.

இந்த அணை இந்தியாவுக்குப் பாதுகாப்பு ரீதியாக பெரும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடும் என நாட்டு வல்லுநர்களும், அரசியல்வாதிகளும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். அருணாச்சலுக்கு மிக அருகில் இருப்பதால், “இந்த அணையை சீனா ஒரு நீர் வெடிகுண்டாகப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது” என அந்நிலையின் முதல்வர் பெமா காண்டு கடந்த வாரம் கடுமையாக எச்சரித்திருந்தார்.

பிரம்ம புத்திரா நதி திபெத்தில் “யார்லுங்சாங்போ” என அழைக்கப்படுகிறது. இந்த நதி இந்தியாவின் அருணாச்சல் மற்றும் அசாம் வழியாக வங்காள விரிகுடாவை அடைகிறது என்பதால், அதன் மீது சீனா கட்டும் அணை இந்தியாவின் நீர் பாதுகாப்பிற்கும், சுற்றுச்சூழலுக்கும் பெரும் ஆபத்தை உருவாக்கும் என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சவுதி

## 20 ஆண்டுகள் கோமாவில் இருந்த சவூதியின் தூங்கும் இளவரசர் காலமானார்



சவூதி அரேபியாவின் தூங்கும் இளவரசர் என அறியப்பட்ட இளவரசர் அல் வாலீத் பின் காலித் பின் தலால் அல் சவுத். சவூதி அரேபியாவை நிறுவிய மன்னர் அப்துல் அஜீசின் தலைமுறையில் வந்த கொள்ளு பேரன் ஆவார்.

இவர் கடந்த 2005ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லண்டனில் ராணுவ கல்லூரியில் படித்து வந்தபோது கார் விபத்தில் சிக்கி கோமா நிலைக்கு சென்றார். அப்போது அவருக்கு வயது 15 ஆகும். கோமா நிலையில் அவர் சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் உள்ள கிங் அப்துல்அஜிஸ் மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வந்தார்.

இதனால் அவர் தூங்கும் இளவரசர் என்று அழைக்கப்பட்டார்.

வியட்நாம்

## வியட்நாமில் சுற்றுலா படகு கவிழ்ந்து விபத்து 27 சடலங்கள் மீட்பு



வியட்நாமில் சுற்றுலா படகு கவிழ்ந்த விபத்தில் 27 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 12 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், 14 பேர் மாயமாகி உள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதை அந்த நாட்டின் அரசு செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது.

உலக அளவில் வியட்நாம் சுற்றுலா சார்ந்து பிரபலமான பயண இடங்களில் (டெஸ்டினேஷன்) ஒன்றாக அறியப்படுகிறது. வியட்நாமில் உள்ள பிரபல சுற்றுலா தளங்களில் ஹலாங் பே (Halong Bay) விரிகுடா பகுதி உள்ளது. இந்நிலையில், சனிக்கிழமை (19)அன்று 53 பேருடன் சுற்றுலா படகு ஒன்று கடல் பகுதியில் அந்த நாட்டின் நேரப்படி மதியம் 2 மணிக்கு சென்றது.

அப்போது திடீரென வீசிய சூறைக்காற்று காரணமாக அந்த படகு கவிழ்ந்தது. இதில் படகில் பயணித்தவர்கள் கடலில் விழுந்துள்ளனர். 27 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களில் 8 பேர் குழந்தைகள் என தகவல். 14 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 12 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

திருச்சி

பல்கலைக்கழக

# விடுதியில் இரகசியமாக குழந்தை பெற்ற மாணவி



மத்திய சீனாவின் ஹூபே மாகாணத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் மூன்றாம் ஆண்டு கல்வி கற்று வரும் 20 வயதான மாணவி, எதிர்பாராதவிதமாகத் தனது விடுதி அறையில்லேயே ‘இராட்சத’ குழந்தை ஒன்றைப் பெற்றுள்ள அதிர்ச்சிகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

4.5 கிலோ எடையுள்ள அந்த குழந்தையின் பிரசவம் இரவில் ஏற்பட்டதால், மாணவியின் அறைத் தோழி தீவிர இரத்த வாசனையால் விழித்தெழுந்ததும் பரபரப்பாகக் கூறியுள்ளார். மாணவியின் மேல் படுக்கை போர்வை முழுவதும் இரத்தத்தில் நனைந்திருந்தது என்றும், அந்த நேரத்தில் மாணவி வலியில் தவித்துக் கொண்டிருந்தார் என்றும் அறைத் தோழி தெரிவித்துள்ளனர்.



சம்பவ இடத்துக்கு வந்த மருத்துவக் குழு, குழந்தை பிறந்து விட்டதைக் கண்டதும், அவசரமாக இரத்தப் போக்கை கட்டுப்படுத்துவதற்கான மருத்துவ சிகிச்சை அளித்துள்ளனர். இந்த அளவுக்கு பெரிய குழந்தையைக் கண்டும் மாணவியின் உடல் நிலையைப் பார்த்தும் மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

மேலும், மாணவி கர்ப்பம் நிரம்பிய நிலையிலிருந்தபோதும், தன்னுடைய இறுதி பரீட்சைகளுக்குப் பல்கலைக்கழகத்தில் இருக்க விரும்பியதாலும், மேல் படுக்கையிலேயே ஏறி தங்கியிருந்தார். இந்த விடயத்தில், “இது அவளுக்குப் பிரசவம் முதல் முறை அல்ல. ஏற்கெனவே ஒரு குழந்தை அவளுக்கு உண்டு,” என்று அறைத் தோழி அமைதியாகக் கூறியிருந்தார் என்பது சுவாரஸ்யமான பின்னணி ஆகும்.

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில்

# துடுப்பாட்டவீரராக மாத்திரம் களமிறங்கவுள்ள பண்ட்?



இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில் இந்தியாவின் ரிஷப் பண்ட் விளையாடினால் துடுப்பாட்டவீரராக மாத்திரமே களமிறங்குவாரெனத் தெரிகிறது.

விரலில் அவருக்கு ஏற்பட்ட உபாதை குணமடைந்தாலும் அதில் தாக்கம் ஏற்பட்டால் வலியை உணருகின்ற நிலையில் துடுப்பாட்டவீரராக மாத்திரமே பண்ட் விளையாடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அந்தவகையில், துருவ் ஜுரேல் விக்கெட் காப்பாளராக களமிறங்கினால் நிதிஷ் குமார் ரெட்டியை அவர் அணியில் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அர்ஷ்டீப் சிங்கும் காயமடைந்துள்ள நிலையில் இப்போட்டியில் ஜஸ்பிரிட் பும்ரா களமிறங்குவாரெனத் தெரிகிறது. வொஷிங்டன் சுந்தரை குல்தீப் யாதவ் பிரதியிடக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

இதேவேளை, ஒவ்வொரு இனிங்ஸ்களிலும் ஆரம்பத்தைப் பெற்றபோதும் அதைப் குறிப்பிடத்தக்க ஓட்ட எண்ணிக்கையாக கருண் நாயர் மாற்றியிருக்காதபோதும் மூன்றாமிலக்கத்தில் புதிய வீரரைக் களமிறக்குவது சிக்கலானதென்ற நிலையில் அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படலாம்.



## பதக்கங்களை அள்ளிய புத்தள பாடசாலை மாணவர்

■ எம்.யூ.எம்.சனூன்

மலேசியாவில் நடைபெற்ற 17ஆவது சி.கே கிளாசிக் சர்வதேச திறந்த டைக்குவாண்டோ சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குபற்றிய புத்தளம் மாணவர்கள் 15க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று இலங்கை நாட்டுக்கும், புத்தளம் நகருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

பயிற்றுவிப்பாளரும், தடகள வீரருமான இஷாரா பியூமாலி சமரகோன் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்கள், புத்தளம் சாந்த அன்றூஸ் தேசிய பாடசாலை மாணவி என்.ஈ. அசேன் விஷ்மிகா மூன்று தங்கப் பதக்கங்கள், புத்தளம் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பாடசாலை மாணவி ஏ.ஆர்.எப்.ஹனா மஸ்யத் சாரா இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம், புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை மாணவி எம்.எச்.ரீமா செய்ன் இரண்டு தங்கப் பதக்கங்கள், புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை மாணவன் எம்.எம்.ஷாதின் அஹமத் மூன்று வெள்ளிப் பதக்கங்கள் என 15 பதக்கங்களை அள்ளிக் குவித்து சாதித்து காட்டியுள்ளனர்.

இந்த வெற்றி வீரர்கள் ஐவரையும் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்கின்ற நிகழ்வு புத்தளம் நகர மத்தியில் வியாழக்கிழமை (17) காலை இடம்பெற்றது.



## பார்சிலோனாவில் ரஷ்ஃபோர்ட் இணைய கொள்கையளவில் இணக்கம்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான மார்க்கஸ் ரஷ்ஃபோர்ட் இணைவதை நெருங்கியுள்ளார்.

கடனடிப்படையில் 27 வயதான ரஷ்ஃபோர்ட்டைக் கைச்சாத்திட கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த பருவகாலத்தின் இரண்டாவது அரைப்பகுதியை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான அஸ்தன் வில்லாவில் கடனடிப்படையில் ரஷ்ஃபோர்ட் கழித்திருந்தார்.

தனியாகப் பயிற்சி பெறுமாறு கூறப்பட்ட ஐந்து மன்செஸ்டர் யுனைட்டெட் வீரர்களில் ரஷ்ஃபோர்ட் ஒருவராவார்.

ஐந்தாவது சுற்றில் டுபொய்ஸை வீழ்த்தி

## அதிபார பட்டத்தை மீளக் கைப்பற்றிய உசிக்

ஐக்கிய இராச்சியத்தில் சனிக்கிழமை (19) அன்று நடைபெற்ற போட்டியில் பிரித்தானியாவின் டானியல் டுபொய்ஸை ஐந்தாவது சுற்றில் வீழ்த்திய உக்ரேனின் ஒலெக்ஸான்டர் உசிக், மீண்டும் உலக அதிபார குத்துச்சண்டைப் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

போட்டியின் ஆரம்பம் முதலே 38 வயதான உசிக்கின் திறமை வெளிப்பட்டதுடன், அவரை நோக்கிய அனைத்து குத்துக்களையும் இலகுவாக தவிர்த்து தன்னை விட 11 வயது இளமையான டுபொய்ஸுக்கு குத்துக்களை வழங்கியிருந்தார்.

அந்தவகையில் தான் இதுவரையில் பங்கேற்ற 24 போட்டிகளிலும் வெற்றியைப் பெற்றுள்ளார்.





## சமநிலையில் யுனைட்டட் – லீட்ஸ் போட்டி

சுவீடனில் சனிக்கிழமை (19) நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்கும், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான லீட்ஸ் யுனைட்டெட்டுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 21, ஜூலை 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.